நெய்வதற்கான கூலி பாவு ஒன்றிற்கு 400 மீட்டர் ரூ.370—ம் பாவு ஓட்டுவதற்கு பாவு ஒன்றிற்கு ரூ.50—ம், பசை போடுவதற்கு பாவு ஒன்றிற்கு ரூ.20—ம் ஆக, ரூ.440 கூலியாக வழங்குவதென்று ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் 15—5—2008 முதல் நடைமுறைக்கு வருகிறது. இந்த ஒப்பந்தம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். மேற்படி ஒப்பந்த ஷரத்துகள் வியாபாரிகள் சங்கத் தலைவர் தரப்பிலும், மாஸ்டர் வீவர் தரப்பிலும், நெசவாளர் தரப்பிலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டிருக்கிறது. ஆக, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்பட்டு அனைத்துத் தொழிலாளர்களும் இன்றைக்கு தொழிலில் ஈடுபட்டு பிரச்சினை சுமுகமாக முடிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்பு

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை மறு நாள் எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடக்கவிருப்பதால், நேரத்தின் அருமை கருதி, இன்று எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மூன்று கவன ஈர்ப்புகள் குறித்த அறிவிப்புகளில் ஒன்றை இப்போது எடுத்திருக்கிறோம். மற்ற இரண்டும்—மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் கொடுத்த அந்த இரண்டும் நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) அமராவதி பிரதானக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுதல்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு கவன ஈர்ப்பினை நாளை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்கிறேன். ஏனென்று கேட்டால், அவர்கள் கொடுத்த அந்தக் கவன ஈர்ப்பில் என்ன சொல்லியிருக்கிறார்களோ, அதற்கான உத்தரவினை அரசு போட்டுவிட்டது.